# Panchayat Development Job

**PUBLISH DATE** : 10/06/2022

செ.வெ.எண்:-24/2022

நாள்:09.06.2022

திண்டுக்கல் மாவட்டம்

ஊரக வளர்ச்சி ஊராட்சித் துறையில் 08.11.2011 அன்று பணிநீக்கம் செய்யப்பட்ட முந்தைய மக்கள் நலப்பணியாளர்கள், தற்போது அரசு மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தில் 'வேலை உறுதித் திட்ட பணி ஒருங்கிணைப்பாளர்' ஆக பணியில் சேர விண்ணப்பிக்கலாம் – மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச.விசாகன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

ஊரக வளர்ச்சி ஊராட்சித் துறையில் 08.11.2011 அன்று மக்கள் நலப்பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். பணிநீக்கம் செய்யப்பட்ட முந்தைய மக்கள் நலப்பணியாளர்களை தற்போது அரசு மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தில் 'வேலை உறுதித் திட்ட பணி ஒருங்கிணைப்பாளர்' ஆக பணியில் ஈடுபட வாய்ப்பளித்துள்ளது.

இப்பணிக்கென மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்ட நிதியிலிருந்து ரூ.5,000/-ம், கூடுதலாக கிராம ஊராட்சிப் பணிகளுக்காக ரூ.2500/- ஆக மொத்தம் ரூ.7500/- மாதம் ஒன்றுக்கு ஒட்டுமொத்த தொகுப்பூதியம் வழங்கப்படும். எனவே, 08.11.2011 அன்று பணியிழந்த, இப்பணியில் ஈடுபட விருப்பம் உள்ள முன்னாள் மக்கள் நலப்பணியாளர்கள் தாங்கள் ஏற்கனவே பணிபுரிந்த வட்டாரத்தின் வட்டார வளர்ச்சி அலுவலரை (கிராம ஊராட்சி) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இது தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (கிராம ஊராட்சி) ஏற்கனவே பணியாற்றியதற்கான விவரத்துடன் பணியில் ஈடுபடவுள்ளதற்கான விருப்பக் கடிதத்தையும் வட்டார திட்ட ஒருங்கிணைப்பாளர்/வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (கிராம ஊராட்சி) 13.06.2022 முதல் 18.06.2022-ஆம் தேதிக்குள் வழங்கலாம். அவ்வாறு பணியில் ஈடுபட விருப்பம் தெரிவிப்பவர்களது விருப்பக் கடிதம் பரிசீலிக்கப்பட்டு 01.07.2022 முதல் பணியாற்ற வாய்ப்பு வழங்கப்படும்.

எனவே 08.11.2011 அன்று பணிநீக்கம் செய்யப்பட்ட முந்தைய மக்கள் நலப் பணியாளர்கள் இப்பணி வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள 13.06.2022 முதல் 18.06.2022க்குள் தவறாமல் தங்களது விருப்பத்தினை தெரிவிக்குமாறும், அத்ததைய விருப்ப விண்ணப்பங்கள் மட்டுமே இப்பணியில் ஈடுபட

பரிசீலிக்கப்படவுள்ளதால் குறிப்பிட்ட காலத்திற்குள் விருப்பம் தெரிவிக்கவும், காலம் கடந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்க இயலாது என்பதால் தகுதியுடையவர்கள் குறித்த காலத்தில் விண்ணப்பித்து இப்பணி வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச.விசாகன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.

**WEBSITE POLICIES** **HELP** **CONTACT US** **FEEDBACK**

Content Owned by District Administration
© Dindigul District , Developed and hosted by
National Informatics Centre,
Ministry of Electronics & Information Technology,
Government of India

Last Updated: **Jun 11, 2022**